முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

2 ம் பிரதிவாதி தரப்பு 3 வது சாட்சி (பி.வா.சா.5)

<u>அ.வ.எண். 285/2013</u>

| | | |
|---|---|---|
| பெயர் | - | தனராஜன் |
| த/பெ | - | நவமணி தங்கராஜ் |
| கிராமம் | - | |
| தாலுகா | - | |
| தொழில் | - | |
| ஜாதி | - | |
| மதம் | - | |
| வயது | - | 64 |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ம் நாள் செவ்வாய்கிழமை மேற்படியாரிடமிருந்து சத்திய பிரமாணத்தின் பெயரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் இவ்வழக்கில் 3 ம் தரப்பினர் ஆவேன். லெப்பை குடியிருப்பை சார்ந்த செல்லக்கண்ணு நாடார் மகன் முத்து வேல் நாடாரை தெரியும். அவர் எனக்கு பெரியப்பா உறவு முறை ஆவார். எனது பெரியப்பா

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.12.02 14:10:56 +0530

முத்துவேல் நாடாரின் கையொப்பத்தை பார்த்துள்ளேன். பி.வா.சா.ஆ.5 ன் அசல் உயில் ஆனது தற்போது சாட்சியிடம் காண்பிக்கப்படுகிறது. பி.வா.சா.ஆ.5 ல் 4 பக்கங்களில் உள்ள கையொப்பம் முத்துவேல் நாடார் உடையது ஆகும். என் தாத்தா பெயர் தங்கையா நாடார் ஆகும். அந்த உயில் ஆவணத்தில் 4 வது பக்கத்தில் 1வது சாட்சியாக நவமணி நாடார் என்று கையொப்பம் செய்துள்ளது என் தந்தையின் கையொப்பம் ஆகும்.

(வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.12.02 14:11:02 +0530